நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /107/2026

வழக்கு சாட்சி : L.W.2 – PW .1

| | | |
|---|---|---|
| பெயர் | : | முனியப்பன் |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | அகஸ்தியன்பள்ளி |
| வயது | : | 40 / 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **15.04.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.10.2025 ம் தேதி 16.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்களுடன் நானும், தலைமை காவலர் முருகதாஸ் என்பவரும் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது, சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலிதீன் பையுடன் நின்ற நபரை பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி சங்கர், த /பெ. பக்கிரிசாமி , ஆற்றங்கரைத்தெரு, வெளிப்பாளையம் என கூறினார். அவரை சோதனை செய்த போது சுமார் 180Ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 10 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 17.00 மணியளவில் எதிரியை கைது செய்தார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 17.15 மணிக்கு, உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் முருகதாஸ் மற்றும் என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக பாண்டி சாராய பாட்டில்கள் 10 எண்ணிக்கையை கைப்பற்றினார். என்னிடம்

நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 17.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமை காவலர் முருகதாஸ் மற்றும் என் முன்னிலையில் அழிப்பு மகஜர் வாயிலாக கொட்டி அழித்தார், அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அழிப்பு மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த அழிப்பு மகசர் அ.த.சா.ஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே 18.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.824/2025, U/s.4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள் எதுவும் கைபற்றபடவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு எதுவும் அனுப்படவில்லை. கைப்பற்றிய பொருட்களை அழித்து விட்டோம். கைப்பற்றி அழித்ததாக உண்மைக்கு புறம்பாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில்

குற்றம் சாட்டப்பட்டவர் இல்லை என்றும் நான் முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எந்தவிதமான நிகழ்வுகள் நடைபெறவில்லை என்றும் உதவி ஆய்வாளர் போட்ட வழக்கு என்பதற்காக நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /107/2026

வழக்கு சாட்சி : Additional Witness –1, – PW 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகன்ராஜ் |
| தந்தை பெயர் | : | துரைராஜ் |
| கிராமம் | : | |
| வயது | : | 38 / 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **15.04.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்துக்களை எனக்கு நன்கு தெரியும். கால விரையத்தை தவிர்க்கும் பொருட்டும் நீதியின் நலன் கருதியும் அவருக்காக நான் கூடுதல் சாட்சியம் அளிக்கின்றேன்.

கடந்த 05.10.2025 ம் தேதி 16.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்களுடன் தலைமைகாவலர்கள் முனியப்பன் மற்றும் முருகதாஸ் ஆகியோர்கள் வாஞ்சூர் சோதனை சாவடி அருகே மதுவிலக்கு ரோந்து சென்று கண்காணித்த போது, சந்தேகத்திற்கு இடமாக ஒரு பாலிதீன் பையுடன் நின்ற நபரை பின்னர் விசாரித்து தெரியவந்த எதிரி சங்கர், த /பெ. பக்கிரிசாமி , ஆற்றங்கரைத்தெரு, வெளிப்பாளையம் என கூறியுள்ளார். அவரை சோதனை செய்த போது சுமார் 180Ml பிடிக்கக்கூடிய பாண்டி சாராய பாட்டில்கள் 10 எண்ணிக்கை வைத்திருந்தவரை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை காவல் உதவி

ஆய்வாளர் குற்றக் காரணம் கூறி 17.00 மணியளவில் எதிரியை கைது செய்துள்ளார். மேலும் பொதுமக்கள் யாரும் முன்வராத காரணத்தினால், அன்றைய தினமே 17.15 மணிக்கு, உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமைகாவலர்கள் முனியப்பன் மற்றும் முருகதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக பாண்டி சாராய பாட்டில்கள் 10 எண்ணிக்கையை கைப்பற்றினார்.

பின்னர் அன்றைய தினமே 17.30 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. முரளி அவர்கள் தலைமைகாவலர்கள் முனியப்பன் மற்றும் முருகதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் அழிப்பு மகஜர் வாயிலாக கொட்டி அழித்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே 18.00 மணிக்கு எதிரியை நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து எதிரி மீது மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலைய குற்ற எண்.824/2025 U/s.4(1)(C) TNP Amentment Act 2024 ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் அன்றைய தினமே தனது புலன் விசாரணையை முடித்து கொண்டு, எதிரி மீது ச/பி. 4(1)(C) TNP ACT –ன் படி குற்ற இறுதியறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். தனிநபர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், தனிநபர் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகிய ஆவணங்கள் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். ஆனால், மேற்படி ஆவணங்களில் குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புள்ளி விபர கணக்கிற்காக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சரியாக புலன் விசாரரைண செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் எதிரியின்

பெயரை இறுதி குற்ற அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் நான் தவறான ஆவணங்களின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியிடம் இருந்து தடயப்பொருள்  எதுவும் கைபற்றபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.